முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை  திருமதி பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,

முதன்மை சார்பு நீதிபதி

அ. சா. 4 நாள்.18.07.2023

| அமர்வு வழக்கு எண். | 114/2021 | | |
|---|---|---|---|
| பெயர் | கோபி | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரி ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் குத்தாலம் கஞ்சிவாய், மெயின் ரோட்டில் வசித்து வருகிறேன். நான் டைலர் கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ சா 1 முதல் 3 வரை எனக்கு தெரியும். சாட்சி கோகிலா என்பவரை எனக்கு தெரியும். 25/01/2021 அன்று காலை 9 மணிக்கு காஞ்சிவாய் மெயின் ரோட்டில் உள்ள ஐயப்பன் வீட்டு அருகில் ஒரே சத்தமாக இருந்தது. நான் போய் பார்த்தேன். அப்போது அ சா 2 கத்தியால் குத்துப்பட்டு கீழே கிடந்தார். அப்போது தடுக்க வந்த கலாவதி கணவர் சந்தினை ஆஜர் எதிரி விளாவிலும், கையிலும், நெஞ்சிலும் கத்தியால் குத்தினார். அப்போது அங்கிருந்த கோகிலாவை விளாவில் கத்தியல் குத்தினார். கத்தியால் குத்திவிட்டு கத்தியை வாய்களில் போட்டுவிட்டு ஓடிவிட்டார். பிறகு 108க்கு போன் செய்து அம்புலன்ஸ் வர வைத்து மயிலாடுதுறை அரசு மருத்துவ மனையில் சிகிச்சைகாக சேர்த்தோம். அவர்களை மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவ மனைக்கு அழைத்து செல்ல கூறிவிட்டதால் திருவாரூர் அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.